2014 ஜூலை 11] [பேரவைத் தலைவர்]

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும். (குறுக்கீடுகள்)

செல்லத்தக்க வேட்பு மனுக்களின் எண்ணிக்கை, நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், அப்பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும். (குறுக்கீடுகள்)

## 2. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் 10–7–2014 அன்று பயன்படுத்திய வார்த்தையை நீக்கக் கோருதல்—*தொடர்ச்சி*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு முன்பு அவையில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்களே "அந்த அளவுக்கு ஆளும் கட்சி தன்னடித்த மூப்பாக என்று சொல்வார்களே, கிராமத்து மொழி அதுபோல" என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, இதுபோன்ற வார்த்தை unparliamentary வார்த்தை அல்ல. இதற்கும் மேலே பேசுவதற்கு ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) எனவே இதுபோன்ற முன்னுதாரணங்கள் நிறைய இருக்கின்றன. (குறுக்கீடுகள்) அதனால் இதில் ஒன்றுமில்லை.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சிலர் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கை அருகே நின்றுகொண்டு கோஷமிட்டனர்.)

நான் மற்ற அலுவல்களுக்குப் போகவேண்டும். இதுவெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) அது என்னுடைய உரிமை. (குறுக்கீடுகள்) அது அவைத் தலைவருடைய உரிமை. (குறுக்கீடுகள்) அதுமாதிரி இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது தேவையில்லையென்றால் நீக்கிவிடுவேன். (குறுக்கீடுகள்) நான் இவ்வளவு தூரம் முன்னுதாரணத்தையெல்லாம் எடுத்துச்சொல்லிவிட்டேன். ஏற்கெனவே, இதுபோன்ற முன்னுதாரணமெல்லாம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) அது unparliamentary வார்த்தை கிடையாது. (குறுக்கீடுகள்) இதற்கு மேலே நான் விளக்கம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. இதற்கு மேலே நீங்கள் என்னை வற்புறுத்தினால் நான் நடவடிக்கை

எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடுகள்) இதற்கு மேலே நீங்கள் பேசினால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடுகள்) முதலிலே உங்கள் இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போங்கள். சபைத் தலைவரிடம் வந்து பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அவைத் தலைவரிடம் வந்து பேசுவது முறையல்ல. நான் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களை நான் எச்சரிக்கிறேன். உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இதற்கு மேலும் நான் பொறுமையாக இருக்கமுடியாது. (குறுக்கீடுகள்) அவையை நடத்த வேண்டும். நிறைய அலுவல்கள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) பலமுறை எச்சரித்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையை நடத்த விடாமல், அவைக்கு குந்தகம் விளைவிக்கின்ற காரணத்தினால், அவர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (கூச்சல் குழப்பம்) கூச்சல்-குழப்பம் இல்லாமல் வெளியேற்றுங்கள். எல்லோரையும் வெளியேற்றுங்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)*

*முற்பகல் 11–45*

## 3. அறிவிப்புகள்–*தொடர்ச்சி*

## (ஆ) பேரவை அலுவலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 14–7–2014 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகியன 5–8–2014 அன்று பிற்பகல் மற்றும் 6–8–2014 ஆகிய நாட்களிலும், 6–8–2014 அன்று எடுத்துக் கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை 22–7–2014 அன்றும், 22–7–2014 அன்று எடுத்துக் கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை 14–7–2014 அன்றும், 21–7–2014 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கைகளில், மானியக் கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை 8–8–2014 அன்றும் பேரவையின் ஒப்புதலுடன் எடுத்துக் கொள்ளப்பெறும். (குறுக்கீடு)